பா.ஜ.க. கூட்டணிக்கு பழனிசாமி பம்மியதற்கு மகன் மிதுனே சாட்சி!

இடி அமின் ஆட்சியை நடத்திவிட்டு இம்சை அரசன் போல உளறிக் கொட்டுகிறார் பழனிசாமி!

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, ஏப்.30-

எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சட்டம் ஒழுங்கு குறித்து சட்டமன்றத்தில் 'பச்சைப் பொய்' பழனிசாமி சொன்ன பொய் குற்றச்சாட்டுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புள்ளி விவரங்களுடன் தோலுரித்தார்.

பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி! துயரங்களைக் கொடுக்கக்கூடிய ஆட்சிக்கு தூத்துக்குடி துப்பாக்கிச் சூடே சாட்சி! அவமான ஆட்சிக்கு அதிமுக ஆட்சியே சாட்சி! என அடிமை அதிமுகவின் அவல ஆட்சியைப் பற்றி முதலமைச்சர் சொன்ன உண்மைகளுக்கு பதில் சொல்ல திராணி இல்லாமல் பழனிசாமி வழக்கம் போலவே திமுகவை வசைபாட கிளம்பியிருக்கிறார்.

கரப்ஷன் ஆட்சியை நடத்திய பழனிசாமி, அடுத்த வெர்ஷன் பற்றியெல்லாம் பேசலாமா? பாஜக கூட்டணியில் சேர்ந்த போதே அதிமுகவின் வெர்ஷன் முடிந்துவிட்டது. கூட்டணி ஆட்சி என்று சொன்ன போதே பழனிசாமியின் அரசியல் அத்தியாயம் முடிவுக்கு வந்துவிட்டது. அவரது குடும்பமே முடிவுரை எழுதிவிட்டது. பாஜக கூட்டணிக்கு பழனிசாமி பம்மியதற்கு மகன் மிதுனே சாட்சி!

தேர்தலுக்கு முன்பே மக்கள் தங்களுக்கு அளிக்கப் போகும் படுதோல்வியை மறைக்க விரக்தியில், கேலிக்கூத்துக்களை செய்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

அடிமை ஆட்சிக்கு அதிமுகவே சாட்சி. அதற்கு மக்கள் தொடர்ச்சியாக அதிமுகவுக்கு பரிசளித்த பத்து தோல்விகளே சாட்சி! தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் பாஜகவின் காலடியில் வீழ்ந்துக் கிடந்து அடிமை அரசியல் செய்து வரும் பழனிசாமியை 2026 தேர்தலில் மக்கள் தோற்கடித்து ஓட வைக்கப்போவது உறுதி!

தமிழ்நாட்டை ஆதிக்கம் செய்ய நினைக்கும் பா.ஜ.க.விற்கும்,

அதன் அடிமை அதிமுகவிற்கும் தமிழ்நாட்டு மக்கள் 2026-லும் 'Getout' சொல்லப்போவது உறுதி! இப்போது இருக்கிற 66 அதிமுக எம்.எல்.ஏ-கள் எண்ணிக்கையில் 2026-ல் 6 கூட கிடைக்காது.

திராவிட மாடல் 2.0, அமையப் போகும் வயிற்றெரிச்சலில் பழனிசாமி செய்யும் இந்த கோமாளிக்கூத்துகளைப் பார்த்தால், பரிதாபம்தான் வருகிறது.

'அதிமுக ஆட்சியில் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நின்றது' என சொல்லியிருக்கிறார் பழனிசாமி. சிறப்பான ஆட்சி நடத்தி இருந்தால், தொடர்ந்து 10 தேர்தல்களில் ஏன் அதிமுக தோற்றது? இடி அமின் ஆட்சியை நடத்திவிட்டு இம்சை அரசன் போல உளறி கொட்டிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில் மக்களின் ரத்தம் குடித்த ஆட்சி, பழனிசாமியின் ஆட்சி.

"அண்ணா பெல்ட்டால அடிக்காதீங்கணா..." என அப்பாவி இளம் பெண்கள் கதறல் கேட்டால், அது பழனிசாமி ஆட்சிக்கு சாட்சி!

நீட் உள்பட பல்வேறு மாநில உரிமைகளைசுயநலத்துக்காக டெல்லியிடம் அடகு வைத்த அரசுக்கு பழனிசாமியே சாட்சி!

தலைவி வாழ்ந்த பங்களாவில் கொலை, கொள்ளை நடந்த ஆட்சிக்கு கொடநாடே சாட்சி!

அப்பாவையும் மகனையும் அடித்து கொன்றதற்கு சாத்தான்குளமே சாட்சி!

இப்படி பழனிசாமி ஆட்சியில் நடந்த அவலங்களையும் அக்கப்போர்களையும் எப்படி மறக்க முடியும். தமிழ்நாட்டு வரலாற்றில் பழனிசாமியின் நான்கரை ஆண்டு காலம் இருண்டகாலமாகதான் இருந்தது. அரசியலின் கரும்புள்ளி நீங்கள். இனி எந்த காலத்திலும் தமிழ்நாட்டில் ஆட்சியை மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்களின் மனங்களையும் பிடிக்கவே முடியாது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறை, தீயணைப்புத்துறை மானியக் கோரிக்கைகளுக்கு சிறப்பான முறையில் பதிலளித்துப் பேசிய

முதல்வருக்கு - பல்வேறு கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்து!

சட்டப்பேரவையில் தெரிவித்தனர்!

சென்னை, ஏப்.30-

சட்டமன்றக் கூட்டத்தொடரின் இறுதி நாளான நேற்று (29.4.2025) காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளின் போது சிறப்பான முறையில் பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் உதயகுமார், எதிர்க்கட்சி கொறடா வேலுமணி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் ராஜேஷ் குமார், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் கோ.க. மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் சிந்தனைச்செல்வன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், கொங்கு தேசிய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜவஹிருல்லா, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

தீண்டாமையின் அடையாளமான 'காலனி' என்ற சொல்லை நீக்கிய

'திராவிட மாடல்' முதல்வருக்கு நன்றிகள் - பாராட்டுகள்!

த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் அறிக்கை!

கோவை, ஏப்.30-

தீண்டாமையின் அடையாளமான 'காலனி' என்ற சொல்லை நீக்கிய திராவிட மாடல் முதல்வருக்கு நன்றி தெரிவித்து த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை. கு.இராமகிருட்டிணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.4.2025) சிறப்பு வாய்ந்த ஓர் அறிவிப்பை செய்திருக்கிறார். காலம் காலமாக சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களை வைத்து சமூகத்தில் அவர்களை இழிவாக நடத்துகிற தன்மையை ஒழிக்கின்ற வகையில் இனிமேல் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழுகின்ற குடியிருப்பு பகுதிகளை காலனி என்று அழைக்கக்கூடாது.

அதேபோல் அரசு ஆவணங்களிலும் இனிமேல் காலனி என்ற வார்த்தை இடம் பெறாது என்று அறிவித்திருக்கிறார். தந்தை பெரியாரும் அம்பேத்கரும் விரும்பிய சாதியற்ற சமூகத்தை அமைப்பதற்கு இந்த அறிவிப்பு ஒரு மைல் கல்லாக அமையும்.

சுயமரியாதை உரிமைகளையும், தீண்டாமை ஒழிப்பில் திராவிட மாடல் அரசு ஆளுகின்ற முதல்வர் மு.க.ஸ்டாலின்

அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு தந்தை பெரியார் திராவிடர் கழகம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. ஆட்சியில் கிடைக்காத சலுகைகளாக

அரசு ஊழியர்களுக்கு 9 அறிவிப்புகளை வெளியிட்ட முதல்வருக்கு கோடானு கோடி நன்றிகள்!

அரசு அச்சக தொ.மு.ச. பொதுச் செயலாளர் எஸ்.ஜி.பிரபாகர் அறிக்கை!

சென்னை, ஏப்.30-

எடப்பாடியின் அ.தி.மு.க. ஆட்சியில் கிடைக்காத சலுகைகளை அரசு ஊழியர்கள் நலன் கருதி அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கோடானு கோடி நன்றிகள் என அரசு அச்சக தொழிலாளர் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எஸ்.வி. பிரபாகர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 28.04.2025 அன்று 110 விதியின் கீழ் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நீண்ட நெடு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த சரண்டர் விடுப்பு 15 நாட்கள் முன்பு அறிவித்த 2026-ஆம் ஆண்டு பெறுவதற்காக இருந்ததை 2025-ஆம் ஆண்டு (01.10.2025) பெறுவதற்கு அறிவித்ததையும் சொன்னதையும் செய்வோம். சொல்லாததையும் செய்வோம் எனும் தி.மு.க.வின் தாரக மந்திரத்தை பறைசாற்றும் விதமாக அரசு ஊழியர்களின் மகன். மகள் திருமண உதவி திட்டமாக ரூ.5,00,000 வழங்கியதற்கும், அரசு ஊழியர்களின் பண்டிகைக்கால முன்பணமாக ரூ.10,000- ஐ ரூ.20,000- ஆக உயர்த்தி வழங்கியதற்காகவும், தமிழ்நாட்டில் தற்போது பணியமர்த்தப்பட்ட இளம் ஊழியர்களின் பழைய ஓய்வூதிய திட்டக்குழு அறிக்கையை குறுகிய காலத்தில் வழங்கிட உத்தரவிட்டதற்கும், மேலும் பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்திற்கு வழங்கப்பட்ட 12 மாதங்கள் விடுப்பில் இருக்கின்ற காலத்தையும் பதவி உயர்வு காலத்தில் கணக்கில் எடுத்துக் கொண்டு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டதற்கும், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்த சங்கங்களையும் நேரில் அழைத்து பேசாத எடப்பாடி அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை உள்ளது போலதற்போது நீலிக்கண்ணீர் வடித்து அறிக்கை விடுகின்ற எடப்பாடிக்கு கழகத் தலைவர் அவர்கள் தற்போது அறிவித்த 9 சலுகைகளும் வாயடைத்துப் போக வைத்துள்ளது.

எடப்பாடி ஆட்சிக் காலத்தில் கிடைக்காத சலுகைகள் அனைத்தையும் மேதின வாழ்த்துகளோடு முதல்வர் அவர்கள் வழங்கியதற்கு அரசு தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு எஸ்.வி. பிரபாகர் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கி. சோழன்

ஏப்ரல் 30 (2001)

பெங்களூர் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர். கர்நாடக மாநில அமைப்பாளராக பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டில் கர்நாடக மாநில தி.மு.க. முதல் மாநாடு சிறப்பாக நடைபெற்றதில் விளம்பரச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டதன் விளைவாக, கலப்புத் திருமணத்தை ஏற்கின்ற வகையில் வேறு சாதியைச் சார்ந்த ஒரு கைம்பெண்ணைக் கைப்பிடித்து, அண்ணா அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக 1986ஆம் ஆண்டு தலைமைக் கழகம் அறிவித்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை இவர் தலைமையேற்று வெற்றிகரமாக நடத்தினார். இதனால் காவல்துறை வழக்கு போட்டு கைது செய்து சிறையில் அடைத்தது.

1997ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

"மே நாள் விழா"

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, மே தினப் பூங்காவில் உள்ள "மே தின நினைவுச் சின்னத்தில்" தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகிறார்கள்.

ஒருங்கிணைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் அணிதிரண்டு வருக!

தி.மு.க.தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் வேண்டுகோள்

உழைப்பவர்கள் போற்றும் உன்னதத் திருநாளாம் "மே தின" மாகிய 1.5.2025 அன்று காலை 8 மணிக்கு சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மே தினப்பூங்காவில் அமைந்துள்ள மே தின நினைவுச் சின்னத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர். இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள் - அமைச்சர் பெருமக்கள் - சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

தி.மு.க. தொழிலாளர் அணியின் ஒருங்கிணைந்த சென்னை - காஞ்சிபுரம் - திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் தொழிலாளர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்",
சென்னை - 18
நாள்- 29.04.2025

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர், தி.மு.க. தொழிலாளர் அணி.

அமைச்சர்கள் கே.என்.நேரு - தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கின்றனர்

செங்கல்பட்டு நகரில் பாதாள சாக்கடைத் திட்டப் பணி!

நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் வேண்டுகோள்!

செங்கல்பட்டு, ஏப். 30

செங்கல்பட்டு நகராட்சியில் 188 கோடி மதிப்பிலான பாதாள சாக்கடை திட்டப் பணிகளை இன்று அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன் ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர். இதில் செங்கல்பட்டு நகரக் கழகத்தினர் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டுமாய் நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ரூ.188.25 கோடிக்கு அடிக்கல் நாட்டப்பட்ட செங்கல்பட்டு நகர மக்களின் நீண்டநாள் கனவாக இருந்த பாதாள சாக்கடை திட்டப்பணிகளை துவக்க விழா இன்று (30.04.2025 புதன்கிழமை) மாலை : 5:00 மணிக்கு தூய கொலம்பஸ் மேல்நிலைப் பள்ளி பழைய பேருந்து நிலையம், செங்கல்பட்டில் நடைபெறுகிறது.

இதில் கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு , காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர்.

இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் , வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. மாவட்ட துணைச் செயலாளர் க.அன்புச்செல்வன் , தலைமை செயற்குழு உறுப்பினர், நகர மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன் உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு நகர வார்டுச் செயாளர்கள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச்செயல் வீரர்கள் கலந்து கொள்ளுமாறு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி. பொன்னுரங்கம்

ஏப்ரல் 30 (2021)

கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஒன்றியப் பிரிப்பு அறிக்கையில் திருத்தம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

மதுரை தெற்கு மாவட்டம்

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேடப்பட்டி தெற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **பூசலபுரம் ஊராட்சி, திருமங்கலம் தெற்கு ஒன்றியத்தில்** செயல்படும்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குருந்தன்கோடு மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **தென்கரை ஊராட்சி கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், தக்கலை வடக்கு ஒன்றியத்தில்** செயல்படும்.

"அண்ணா அறிவாலயம்",
சென்னை - 18
நாள்- 29.04.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர், தி.மு.க.